**செ. வெ. எண்: 583** **நாள்: 03.10.2011**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.10.2011) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் 1 கோடியே 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களின் புதிய அலுவலகக் கட்டடங்களையும் திருவாரூரில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மையத்தையும் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் தமிழகத்தின் 22 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. கால்நடை, கோழியினம் மற்றும் மீன் வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை மாவட்ட அளவில் அனைத்து பண்ணையாளர்களுக்கும் உடனுக்குடன் அறிமுகப்படுத்தி, அவற்றைக் கையாண்டு பயன்பெற வழிவகுப்பதே இவற்றின் பணியாகும். பெரும்பாலான பல்கலைக்கழகப் பயிற்சி மையங்கள் இதுவரை வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

இந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையங்கள் கால்நடைப் பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு உள்ளிருப்பு மற்றும் களப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. கால்நடை வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான கண்காட்சிகள், கருத்தரங்குகள், மக்கள் தொடர்பு முகாம்கள், செயல்முறைப் பயிற்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து கால்நடை இனப்பெருக்கம், தீவன மேலாண்மை, கொட்டகை அமைப்பு, நோய்த் தடுப்பு, லாபகரமான விற்பனை ஆகியவை குறித்த பல்வேறு புதிய, அறிவியல் ரீதியான தொழில்நுட்பங்களை பண்ணையாளர்களுக்கு எடுத்துச் செல்லும் பணியில் இம்மையங்கள் ஈடுபட்டுள்ளன.

மேற்கண்ட கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் சொந்த கட்டடங்களில் இயங்க வேண்டும் என்பதன் அடிப்படையில் திண்டுக்கல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையக் கட்டடம் 71 சென்ட் நிலத்தில் 260.40 சதுர மீட்டர் பரப்பளவில் 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையக் கட்டடம் 1 ஏக்கர் நிலத்தில் 493.94 சதுர மீட்டர் பரப்பளவில் 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் திருவாரூர் உழவர் பயிற்சி மையக் கட்டடம் 86.50 சென்ட் நிலத்தில் 260.40 சதுர மீட்டர் பரப்பளவில் 26 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ளது.

இம்மையங்களின் புதிய கட்டடங்களில் பண்ணையாளர் பயிற்சிக் கூடங்கள், சிறிய ஆய்வகம், கண்காட்சி அறைகள் மற்றும் நிர்வாக அலுவலகம் ஆகியவை அமைக்கப்பபட்டுள்ளன. இப்புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள். இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த இம்மையங்கள் இனிமேல் சொந்த கட்டடத்தில் இயங்க உள்ளன. இதன் மூலம் மாவட்டங்களில் உள்ள பண்ணையாளர்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 3.10.2011